# DEPOSITION OF WITNESS
(Chapter XXII code of criminal procedure)
IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE
C.C.No.141/2025
Deposition of Witness for L.W.1 / P.W.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சண்முகபிரியா | | | |
| Husband's Name | : | சந்தோஷ்குமார் | Occupation | : | -- |
| Village | : | சூரம்பட்டி அணைக்கட்டு | | | |
| District | : | ஈரோடு | Age | : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **09.06.2026**

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**எதிரி -1 ஆஜரில் உள்ளார். எதிரி -2 ஆஜரில் இல்லை.**

**முதல் விசாரணை:**

நான் தற்போது அணைக்கட்டு M.S.K. நகரில் குடியிருந்து வருகிறேன். இல்லத்தரசியாக உள்ளேன். ஆஜர் எதிரி பூபதி மற்றும் மற்றொரு எதிரியான ஜெகநாதனை எனக்கு தெரியும். அவர்கள் எங்கள் வீட்டு அருகில் குடியிருந்து வருகிறார்கள். கடந்த 11.09.2024ம் தேதி. இரவு 11.45 மணிக்கு நான் கர்ப்பமாக இருந்ததால் என் வீட்டு அருகில் உள்ள கருப்புராயன் கோவில் முன்புநடை பயிற்சி செய்து கொண்டிருந்தேன். அப்போது அங்கு ஆஜர் எதிரி பூபதி என்பருடன் ஜெகநாதன் என்பவரும் வந்தார். அப்போது பூபதி என்னை "தேவிடியா" என்று தகாத வார்த்தைகளால் பேசினார். என் குழந்தைக்கு யார் அப்பா என்று தெரியுமா என்று என்னை பேசினார். புகார் கொடுத்தால் குடும்பத்தோடு எங்களைக் கொன்று விடுவதாக மிரட்டினார். ஜெகநாதன் பூபதியை தூண்டிவிட்டதால் பூபதி என்னை தகாத வார்த்தைகளால் பேசினார். அக்கம் பக்கம் இருந்தவர்கள் "ஏன் இவ்வாறு பேசுகிறாய்" என்று அவரிடம் கேட்டதற்கு "நான் அவ்வாறு தான் செய்வேன்" என்று பூபதி சொன்னார். எனக்கு மன உளைச்சலாக இருந்தது. எனவே நான் சூரம்பட்டி காவல் நிலையம் சென்று இருவர் மீதும் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார்

நான் கொடுத்தது தான். **அதில் உள்ள கையொப்பம் என்னுடைய தான். புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகியும் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of criminal procedure)

IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, ERODE

C.C.No.141/2025

Deposition of Witness for L.W.2 / P.W.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சத்தியா | | | |
| Husband's Name | : | ரமேஷ் | Occupation | : | -- |
| Village | : | சூரம்பட்டி அனைக்கட்டு | | | |
| District | : | ஈரோடு | Age | : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **09.06.2026**

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**எதிரி -1 ஆஜரில் உள்ளார். எதிரி -2 ஆஜரில் இல்லை.**

**முதல் விசாரணை:**

நான் சூரம்பட்டிவலசு அணைக்கட்டு ரோட்டில் குடியிருந்து வருகிறேன். இல்லத்தரசியாக உள்ளேன். புகார்தாரர் சண்முகப்பிரியாவை எனக்கு தெரியும். அவர் எனது கணவரின் அண்ணன் மனைவி ஆவார். எனக்கு எதிரிகள் ஜெகநாதன் மற்றும் பூபதியை தெரியும். அவர்கள் இருவரும் எனது வீட்டு அருகில் தான் குடியிருந்து வருகிறார்கள். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு ஒன்பதாவது மாதம், பதினொன்றாம் தேதி எனது கணவரின் அண்ணன் சந்தோஷ்குமார் என்பவரின் வீடும், எனது வீடும் அருகருகே உள்ளது. அவரின் மனைவி சண்முகப்பிரியா கர்ப்பமாக இருந்தார். இரவு **11.00** மணியளவில் சண்முகப்பிரியா கர்ப்பமாக இருந்தால் வீட்டு முன்பு நடைபயிற்சி மேற்கொண்டு இருந்தார் அப்போது அங்கு எதிரிகள் இருவரும் வந்தார்கள். பூபதி சண்முகப்பிரியாவை பார்த்து "கேப்மாரி; தேவிடியா" என்று தகாத வார்த்தைகளால் கொச்சையாக திட்டினார். அக்கம் பக்கம் இருந்தவர்களும் அதை பார்த்து பூபதியை திட்டினார்கள். சண்முகப்பிரியாவிடம் "உனது வீட்டுக்காரர் எங்கே; உன்னை வேண்டுமானாலும் செய்வேன்" என்று சண்முகபிரியாவை பூபதி மிரட்டினார். அக்கம்

பக்கம் இருந்தவர்கள் வந்து பூபதியைமிரட்டி அனுப்பி வைத்தார்கள். சண்முகப்பிரியா இது சம்பந்தமாக புகார் கொடுத்தார் போலீசார் என்னை விசாரித்தார்கள்

**(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகியும் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது).**

Taken down by me / before me in the presence of the Accused in open Court interpreted / read over to the witness and admitted by the depondent to be correct.

J.M. A.M.C.